★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 22உ திங்கள் (4—6—56) ★ ★ வெளியூர்: வைகாசி 23உ செவ்வாய் (5—6—56) [இதழ் 302

ஓய்வு பெற விரும்புவதாக பண்டிதர் கூறினாராம்!

பம்பாய், ஜூன் 2—

'எட்டாண்டுகளாக, ஆட்சிப் பொறுப்பிலிருந்துவிட்டதால், களைத்துப்போய்விட்டேன்; ஓய்வு பெற வழி கிட்டினால், வரவேற்பேன்' என்று பேசினாராம், பண்டித நேரு காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில்!

பலாத்காரச் செயலைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

நேருவின் எதேச்சாதிகார முடிவின் எதிரொலி!

பம்பாய் மீண்டும் 'பம்பாய்' ஆகிறது?

மராட்டியர் போர்க்கோலம்

பல இடங்களில் போலீஸ் துப்பாக்கிப்பிரயோகம்

ஒருவர் பலி; எண்ணற்றோருக்குப் படுகாயம்

பம்பாய், கடந்த ஜனவரிக்குப் பிறகு இப்போது மீண்டுமோர் முறை 'பம்பாய்' ஆக உருவெடுக்குமோ என்ற அச்சம் பிறக்கும் வகையில், சம்பவங்கள், மின்னல்போல் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

துப்பாக்கிகள் மீண்டும் சுழல்கின்றன! ஒருவர் பலியாகியிருக்கிறார்! எண்ணற்றோர் படுகாயப்பட்டிருக்கின்றனர்!

கண்ணீர்ப் புகை குண்டுகள் சர்வசாதாரணமாக உபயோகிக்கப்படுகின்றன.

தடியடிப் பிரயோகம், பலரது எலும்புகளை முறித்துக்கொண்டிருக்கிறது.

கடந்த சனி, ஞாயிறு இருநாட்களும், மீண்டும் பம்பாயில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

'நேருவே திரும்பிப்போ!' 'மராட்டியருக்கு அநீதி இழைத்த பிரதமர் நேருவே! திரும்பிப்போ!' என்ற ஒலி முழக்கம், நேருவின் காதுகளில் இடைவிடாது விழுந்துகொண்டிருக்கிறது.

'ராஜபவன'த்திலிருந்து, சித்தார்த்த நகருக்குப் புறப்பட்டுச் செல்கிறார், நேரு; வழிநெடுக அவருக்குக் கிடைத்த வாழ்த்தெல்லாம்—இந்த முறை—'வையகம் புகழும் மேதையே வருக! ரஷ்யாவில் திக்விஜயம் செய்து திரும்பும் பாரதமாதாவின் தவப்புதல்வரே, வருக! சமாதானத் தூதுவரே வருக, வருக!' என்ற வாழ்த்துக்கள் அல்ல!

'அநீதியின் உருவே திரும்பிப் போ! அநியாயத் தீர்ப்புக்கூறிய நேருவே, திரும்பிப்போ! பம்பாயை மராட்டியரிடமிருந்து பறிக்க நினைக்கும் பண்டிதரே, திரும்பிப் போ,' என்ற கோஷங்கள்தான், அவரை வாழ்த்தியிருக்கின்றன.

எப்போதும் மலர்மாலைகளால் மூழ்கடிக்கப்படும் அவர், இப்போது, கருப்புக் கொடிகளால் திக்குமுக்காடச் செய்யப்பட்டிருக்கிறார்.

அவருக்கு மட்டுமல்ல, அந்த வரவேற்பு! அவரது எதேச்சாதிகாரத்திற்குத் தூபமிடும்—துணை புரியும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் அதே 'மரியாதை'தான் கிடைத்திருக்கிறது.

தேபார், ஆசாத், பந்த், மொரார்ஜி தேசாய், உ. பி. முதன் மந்திரி, ம. பி. முதன் மந்திரி, மைசூர் முதன் மந்திரி ஆகியோரின் கார்களை, கற்களால் 'அபிஷேகம்' நடத்தியிருக்கின்றனர், வெறிகொண்டுவிட்ட சிலர்!

சனிக்கிழமையை விட, ஞாயிறன்று, பம்பாய் மக்கள் அதிகமான கொதிப்பிற்கு ஆளானதாகத் தெரிய வருகிறது.

தீர்ப்பை மாற்றுவதற்கு முயற்சிப்பதுபோல கடந்த மூன்று திங்களாக பாசாங்கு செய்துவந்த பண்டிதர், 'தீர்ப்பை மாற்றுவதற்கு இல்லை' என்று ஆணவம் பேசத் தலைப்பட்டதும் மக்களின் கொதிப்பு அதிகமானதில் வியப்பில்லைதான்!

நேரு பேசிய கடற்கரைக் கூட்டம் அமைதியாக நடைபெற்றதாகத் தெரியவில்லை.

குழப்பமும் கூச்சலும், தடியடியும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும், பண்டிதர் பேசிக்கொண்டிருக்கும்போதே நிகழ்ந்திருக்கின்றன.

எந்த நேரத்திலும் எதுவும் நேரலாம் என்ற அச்சத்தால் நடுங்கிக்கிடக்கின்றனர், போலீஸ் அதிகாரிகள்!

பம்பாய்—மீண்டும் ஓர் முறை 'பம்பாயா'க மாறிவிடுமோ என்ற பயம் தரும் உணர்ச்சியை, நகரத்தில் உலவுவோர் முகம் தெளிவாகக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

எதேச்சாதிகாரி போல, பண்டித நேரு, 'அநீதியைத் துடைக்க மாட்டேன்; எனது போக்கை மாற்றிக்கொள்ள மாட்டேன்; பம்பாய் மராட்டியருக்குக் கிடையாது' என்று ஆணவமாகப் பேசியதினால், குமுறிப்போன சிலரும், இந்த நிலையைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்து வேலை செய்யும் சில சமூக விரோதிகளும், மந்திரிகள், காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோரின் கார்கள் மீது கற்களை வீசிக் கலாட்டா செய்ததாக தேசிய ஏடுகள் செய்தி தருகின்றன.

இந்த நிலையைச் சாக்காக வைத்துப் போலீசார், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, துப்பாக்கிகளைச் சுழற்றியிருக்கின்றனர், பல இடங்களில்!

நேற்று மாலைக்குப் பிறகு இரவு 10மணிக்குள், 30 ரவுண்டுகள்வரை சுட்டிருக்கின்றனர்.

எட்டு இடங்களில் துப்பாக்கிப் பிரயோக[illegible]ப்பட்டிருக்கிறது; [illegible]ருக்கிறார்; படுகாயம் பட்டோரின் எண்ணிக்கை தெரியவில்லை.

அமைதியாகக் கருப்புக் கொடி காட்டியோர் மீதெல்லாம் தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் போன்ற அடக்குமுறைக் கணைகளை வெகு தாராளமாக உபயோகித்திருக்கின்றனர் போலீசார்!

சுமார் 10 அல்லது 12 இடங்களில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட முறைகளில் தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

பண்டித நேரு பேசிய பொதுக் கூட்டத்தில் குழப்பமும், கூச்சலும் இருந்திருக்கிறது.

அனுமதிச் சீட்டுடன் கூட்டத்திற்கு மக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தும், உள்ளே இருந்த பலர், நேரு மேடைக்கு வந்ததும் கருப்புக் கொடிகளைப் பறக்கவிட்டிருக்கின்றார்கள்.

கூட்டத்திற்கு வெளியே இருந்த மக்கள், பண்டித நேரு பேசக் கூடாது என்று கோருவதுபோல, ஒலி முழக்கம் செய்துகொண்டிருந்தனராம். அங்கே யாரோ சிலர், கல்லெறி நடத்தியதாகக்கூறி, தடியடி தந்து, கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினராம், போலீசார்!

நகரம் மீண்டும் கொந்தளிப்பில் ஆழ்வது பற்றிய செய்திகள் வந்தவண்ணம் உள்ளன.

பண்டிதரின் ஆணவம், பம்பாயில் பெருந்தீயை மூட்டியிருக்கிறது. அந்தத் தீ என்னென்ன விளைவுகளை உண்டாக்கப்போகிறதோ?

விவேகமுள்ளோர் விளங்கிக் கொள்வர்!

பம்பாய், ஜூன் 3—

பண்டித நேரு பேசிய சௌபாத்தி கடற்கரைக்கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கை சுமார் ஒன்றரை இலட்சம்தான் என்றும், 'சம்யுக்த மராட்டிய சமிதி'யினர் கூட்டிய கூட்டத்தில் சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர் என்றும் தேசிய ஏடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

அநீதியை நிலைநாட்ட பண்டித நேரு முடிவு!

5 ஆண்டுகளுக்கு பம்பாய் டெல்லியிடமிருக்குமாம்!

முன்னைய முடிவை மாற்றிக்கொள்வதற்கில்லையாம்

மராட்டியரின் உள்ளக்குமுறலை உணரமறுக்கும் நேருவின் ஆணவப்போக்கு!

பம்பாய், ஜூன் 3—

மராட்டியர்களின் உள்ளத்தில் மூட்டப்பட்டிருக்கும் பெருந்தீ, மேலும் கொழுந்து விட்டெரிவதற்கு, துணைசெய்யும் வகையில், பண்டிதநேரு பம்பாயில் பேசியிருக்கிறார்.

பம்பாய் நகர் மராட்டியருக்கு இல்லை என்ற தனது அநியாய தீர்ப்பை, ஆணவத்தோடு உறுதி செய்திருக்கிறார்.

'பொறுங்கள்; ஆத்திரப்படாதீர்கள்; பேசி முடிவு செய்யலாம்; கூடி விவாதிக்கலாம்'—என்றெல்லாம் சாகசம்புரிந்துவந்த அவர், 'பம்பாய் டில்லியின் ஆட்சியின் கீழேயே இருக்கும் என்ற தனது அநியாயத் தீர்ப்பே இறுதியானது; தீர்ப்பை மாற்றுவதற்கில்லை; இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குப் பம்பாய் நகரம், டில்லியின் நேரடி ஆட்சியிலேயே இருக்கும்' என்று, இங்கு நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் பொதுக்குழுக் கூட்டத்தில் அறிவித்திருக்கிறார்.

'தனக்குக் கருப்புக்கொடி' என்ற காட்சியைக் கண்டு மனம் பொறுதவராய், ஆத்திர உணர்ச்சிக்கு பலியாகி, வெறிகொண்டு கூவினாராம், அங்கே—'அழிப்பேன்; ஒழிப்பேன்; கொல்வேன்; சுட்டு வீழ்த்துவேன்'—என்றெல்லாம்!

'பம்பாய் மராட்டியருக்குத்தான் என்ற உண்மையை ஒப்புக் கொண்டாலும், அது, அவர்களுடையது ஆகாது; டில்லி ஆட்சியின் கீழ்வரும்' என்று அவர் துணிந்து இழைத்த அநீதிகண்டு குமுறிக்கொண்டிருக்கும் மராட்டியர்கள், தங்கள் உள்ளக்குமுறலை எடுத்துக் காட்டுவதற்காக அமைதியான முறையிலேயே கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள்.

தன்னை மாலை மரியாதைகளுடன் வரவேற்பதை மகிழ்ச்சிக்குரிய வழக்கமாகக் கொண்டிருந்த மராட்டியர்கள், இப்போது தான் இழைத்த அநீதியினால் அல்லவா கருப்புக்கொடி காட்டி வரவேற்கிறார்கள் என்ற சாதாரண உண்மையை பண்டிதர் உணர்ந்து கொள்ளாதது வருந்தற்குரியது. அவர் அதை உணர்ந்து கொள்ளாதது மட்டுமின்றி 'நமக்கா கருப்புக்கொடி?' என்று எண்ணி ஆத்திரப்பட்டு, அந்த ஆத்திரத்தில், பொறுப்பற்ற முறைகளில் பேசியது, நிலையை மேலும் நெருக்கடிக்கு ஆளாக்கவே உதவியிருக்கிறது.

தங்கள் உள்ளக் குமுறலின் எதிரொலியைக் கேட்ட பின்பேனும், காங்கிரஸ் தலைவர்கள்—குறிப்பாக அநீதியைத் தேடிப்போன நேரு, நீதியின் பக்கம் திரும்புவார் என்றெண்ணிய மராட்டியருக்கு ஏமாற்றத்தை மிகக் கொடூரமான முறையில் அளித்திருக்கிறார்!

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு 'ஜனநாயக வழியில் பம்பாயின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுமாம்.

அதுவரை டில்லிதான் பம்பாய் நகரை ஆளுமாம்!

இந்த முடிவை மாற்றுவதற்கில்லையாம்!

கொக்கரித்திருக்கிறார் பண்டிதர்; காங்கிரஸ் கூட்டத்தில்!

(4-ம் பக்கம் பார்க்க.)

'ஓயமாட்டோம்—ஒழியமாட்டோம்'

நேருவின் தீர்ப்பிற்கு பணிய மறுத்து மராட்டிய சமிதி வீரமுழக்கம்

பம்பாய் 5 ஆண்டுகளுக்கு டெல்லியின் நிர்வாகத்திலிருக்கும் என்று ஆவேசமாகப் பண்டித நேரு அறிவித்த இரண்டு மணி நேரத்திற்கெல்லாம், இடதுசாரிகள் அமைத்துள்ள சம்யுக்த மராட்டிய சமிதியினர், மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டினர். மூன்று இலட்சம் மக்கள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில்; நேருவின் ஆணவமான தீர்ப்பை எதிர்த்து, பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது

நேருவின் தீர்ப்பினை பேச்சாளர்கள் கண்டித்தபோதெல்லாம், மக்கள் கூட்டம், 'வெட்கம், வெட்கம்' என்று கோஷமிட்டிருக்கிறது.

'ஓயமாட்டோம், ஒழியமாட்டோம்; அநீதியை எதிர்த்துப் போராடுவோம்; மராட்டியமெங்கும் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெறும்—தீவிரப்படுத்தப்படும்; பம்பாயை மராட்டிய மாநிலத்துடன் இணைக்காமல் விட மாட்டோம்'—என்று கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சம்யுக்த மராட்டியம் கோரும் காங்கிரசார் மாநாட்டுத் தலைவரான டாக்டர் டி. ஆர். நரவனே 'பம்பாயை தர்மமாக—பிச்சையாகக் கேட்கவில்லை, மராட்டியர்! உரிமையைத்தான் கேட்கின்றனர்' என்று முழங்கியிருக்கிறார்.

ஒத்துழையாமை இயக்கம் நடத்துதல், சட்டமறுப்பு, அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்துதல் போன்ற நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள மராட்டியத் தலைவர்கள் முடிவு [illegible]

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 4-6-'56 திங்கள்

அல்ஜீரிய விடுதலை!

ஒவ்வொரு இருபத்தி நான்கு மணி நேரத்திற்கும், பல நூற்றுக்கணக்கான தலைகள் கொய்யப்படுகின்றன!

இராணுவ நடமாட்டம் இல்லாத நகரமே கிடையாது!

துப்பாக்கிப் பிரயோகத்தை அனுபவிக்காத சிற்றூரே இல்லை!

விமானங்கள், குண்டுமாரி பொழிகின்றன!

பீரங்கிகள் தமது அகண்ட வாயிலிருந்து வெடிகுண்டுகளை அள்ளிவீசி, சர்வநாசம் புரிந்த வண்ணமுள்ளன!

துப்பாக்கிகள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன! தோட்டாக்கள், எண்ணற்ற மனிதர்களின் இதயத்தைத்தில் பாய்ந்து, முதுகைக் கிழித்து, குருதியில் தோய்ந்து, ஓய்ந்து போய் கீழே விழுந்தவண்ணமிருக்கின்றன!

மூன்று இலட்சம் பிரெஞ்சுத் துருப்புகள்—முப்படையினராகப் பிரிந்து—இந்தக் கொலைத் தொழிலை மேற்கொண்டிருந்தும்கூட, அல்ஜீரிய மக்களின் விடுதலை வேட்கையைத் தணித்துவிட முடியவில்லை; கிடைப்பதெல்லாம், ஒவ்வொரு இருபத்தி நான்கு மணி நேரத்திற்கும், கொன்று குவிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பிணங்களின் எண்ணிக்கை தானே தவிர, அல்ஜீரிய மக்களின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி அல்ல!

உலகத்தில், காலனி ஆதிக்கத்தை எதிர்த்து, தாயக விடுதலைக்காக இதுவரை நடைபெற்ற எந்த ஒரு போராட்டத்திலும், அல்ஜீரிய விடுதலைப் போரில் பலி கொள்ளப்பட்டதைப் போன்று, அதிர்ச்சி தரக்கூடிய அளவுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர் பலி கொள்ளப்பட்டதில்லை எனலாம்!

கொழுந்துவிட்டெரியும் அல்ஜீரிய மக்களின் விடுதலை ஆர்வத்தைக் கொடூரமான அடக்குமுறைகளினால், அல்ஜீரியாவிலுள்ள இராணுவம் முழுவதிற்கும் 'வேலை' தருவதின் மூலம் தணித்து, ஒழித்துவிடலாமெனப் பைத்தியக்காரத்தனமாக எண்ணிக்கிடக்கின்றனர், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்!

ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முன்—1830-ல் அல்ஜீரியா, பிரெஞ்சுக்காரரிடம அடிமைப்பட்ட வேடிக்கையான வரலாறு சிருஷ்டிக்கப்பட்டது. அதற்கு முன்பெல்லாம், ரோமானியரின் களஞ்சியமாகவும், மேற்கத்தியர் [illegible]யரை அடிமை கொள்ளப் பயன்படுத்திய 'ஒற்றையடிப் பாதை'யாகவும், கொள்ளைக் கூட்டத்தவர் பதுங்கிக் கொள்ளும் குகையாகவும் இருந்தது, அல்ஜீரியா—என்று கூறுவர்.

இன்று, அங்கே வாழும் 90 இலட்சம் மக்களில், 80 இலட்சம் பேர் அல்ஜீரியர்கள் தான். 10 இலட்சம் பிரெஞ்சுப் பிரபு வர்க்கத்தவர், அங்கே குடியேறி, கொட்டமடிக்கின்றனர். வளமான வயல்கள், உள்ள ஒரு சில பெரும் தொழிற்சாலைகள், சுரங்கங்கள்—இவை எல்லாம் இந்தப் பிரெஞ்சுப் பிரபுக்களின் ஏகபோக உடைமைகள்!

இந்தப் பிரெஞ்சுக் குடியேற்றக்காரர்கள் அல்ஜீரியாவில் உற்பத்திசெய்யும் உணவுப் பொருள் மட்டும், பிரான்ஸ்நாடு முழுவதிலும் பிரெஞ்சு மக்கள் அனைவரும் உற்பத்தி செய்யும் உணவுப் பொருளின் அளவுக்குச் சமமானது என்றால், நம்மில் பலருக்குத் திகைப்புக்கூட ஏற்படலாம.

இப்படி, பொருளாதாரத் துறையில் ஏகபோக ஆதிக்கமும், 'பிரெஞ்சுக்காரர் நாகரிகம் பெற்றவர்கள்; அல்ஜீரியர்கள் நாகரிகவாடையே அறியாத காட்டுமிராண்டிகள்' என்றுகூறி, அதனால் சலுகைகள் பெற்றுக்கொள்வதின் மூலம் சமூகத்துறையிலும், எல்லாவற்றிற்கும் மேலாக இவற்றைத் தேடித்தந்த அரசியல் துறையிலும் ஆதிக்கம் புரிகின்றனர், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்!

இந்தக் காலனி ஆதிக்கக் கொடுமையை எதிர்த்துத்தான் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர், அல்ஜீரிய மக்கள்!

அல்ஜீரியாவின் உள்நாட்டு விவகாரங்களைக் கவனிக்க என்று கூறி, இங்கு ஒரு 'மக்கள் சபை'யை, 1947-ல், பிரான்ஸ் நிறுவியது.

ஆனால், அந்த 'மக்கள் சபை'க்கான தேர்தலில் கலந்துகொள்ள, அது அமைவதற்குக் காரணமாயிருந்த அல்ஜீரிய தேசீயக் கட்சியினர் மறுத்துவிட்டனர்; காரணம், 'மக்கள் சபை'யின் பிரதிநிதித்துவச் சட்டம், 'பிரெஞ்சுப் பிரபு குலத்தவரு'க்குச் சாதகமாக அமைந்ததுதான்!

தங்கள் நாட்டு ஆட்சிப் பொறுப்பு தங்களிடமே இருக்க வேண்டும் என்ற இயற்கையான தேசிய உணர்ச்சியினால் தூண்டப்பட்ட அல்ஜீரிய மக்கள், 1947 முதல் 1955 வரை வெகு அமைதியாக, புதிய மக்கள் சபை பிரதிநிதித்துவச் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்துவந்தனர்.

பணிய மறுத்தது, பிரெஞ்சு ஏகாதிபத்தியம்! 'அல்ஜீரியா, பிரான்சின் ஒரு பிரிக்க முடியாத பகுதி' என்று பேசமுற்பட்டது!

விளைவு, தேசியவாதிகள், தங்களை 'தீவிரவாதிகள்' என்று நியாயவான்களாலும், 'பயங்கரவாதிகள்' என்று அநியாயக்காரர்களாலும் அழைக்கப்படுகிற நிலைக்குச் சென்று விட்டனர்.

ஓலமிடுகிறது, பிரெஞ்சு ஏகாதிபத்தியம! படுகொலை புரிகிறது, அல்ஜீரிய மக்களை—சுதந்திரம் கோருவோரை!

பல இலட்சம் பிரெஞ்சுத் துருப்புகளுக்கும், அவற்றின் மிகப்பயங்கரமான அடக்குமுறைகளுக்கும், அல்ஜீரிய மக்களின் விடுதலைக் கிளர்ச்சியை அடக்க ஆற்றலிருக்கவில்லை என்றால், அல்ஜீரிய மக்களின் விடுதலைப் பசியை என்னென்று அழைப்பது?

'அல்ஜீரியாவை விட்டு வெளியேறமாட்டோம்' என்ற பிரெஞ்சுக்காரரின் பிடிவாதத்திற்கு, மனித குல வரலாறு போதிக்கும் நீதி கற்ற எவரும் தலையசைக்க முடியாது.

'பயங்கரவாதி'கள் என்று உலகத்திற்கு ஏகாதிபத்தியவாதிகள் சுட்டிக்காட்டுகிற தீவிர அல்ஜீரியர்களுக்கு, பிரெஞ்சுக்காரரைப் பழி வாங்குவதைத் தவிர, வேறு சுலபமான வழி கண்ணுக்குப் புலப்படாது போய்விட்டது எவருக்கும் ஆச்சரியத்தைத் தருவதற்கில்லை!

தெளிவான அநீதிக்கு எதிராக, எட்டு ஆண்டுகளுக்கு மேலாக பொறுமையாகவே—அமைதியாகவே போராடியிருக்கிறார்கள், அல்ஜீரிய மக்கள்!

ஆனால், அவர்களின் பொறுமைக்குத் தப்பர்த்தம் கற்பித்துக்கொண்டு, அல்ஜீரியாவின் தேசிய அபிலாஷைகளைக் கண்ணுற மறுத்துவிட்ட பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள், இனறு மனித வேட்டையாடுவதற்கு எந்தவித உரிமையும் உடையவர்கள் அல்ல!

அல்ஜீரியாவைப் பெரியதோர் போர்க்களமாக்கிய பின்னும்—தன்னுடைய பல இலட்சியம் துருப்புகளும கை ஓயும் வரை கொலைத் தொழிலைப் புரிந்த பின்னும—அல்ஜீரியர்கள் தங்கள் சோதரர்களில் பல ஆயிரம் பேரை இழந்துவிட்ட பின்னரும பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் புத்தி பெறுமல் போய்விடுவார்களேயானுல், அது வருந்தற்குரிய முடிவை சீககிரமே தேடித் தரும.

அல்ஜீரிய மக்களின் விடுதலை வேட்கையை வாழ்த்துகிறேம். ஏகாதிபத்தியவாதிகளின் கொலைத் தொழிலைக் கண்டிக்கிறேம.

அல்ஜீரியாவிலிருந்து உடனடியாகப் பிரெஞ்சுக்காரர் வெளியேற வேண்டுமென உரத்துக் கூவுகிறேம்.

நேருவின் குழப்பத்திற்குக் காரணம் என்ன?

'மத' அடிப்படையில் கோரப்பட்டது பாகிஸ்தான்!

'இன'-பண்பாடு-வரலாற்று அடிப்படையில் கோரப்படுவது திராவிடநாடு!

47-ல் புரிந்த நியாயம் 56-ல் புரியாமல் போவானேன்?

மாநில மாநாட்டில் சம்பத் அறைகூவல்

நேரு பண்டிதரின், கொள்கைக் குழப்பத்திற்குக் காரணம் என்ன? அவரது நெஞ்சமென்ன, தெளிவில்லாத நெஞ்சமா?

1947-ல் மதஅடிப்படையில் கோரப்பட்ட பாகிஸ்தான் பிரிவினைக்கு ஒப்புதல்தந்த நேரு, இனஅடிப்படையில், வரலாற்றுப் பின்னணியோடு எழுப்பப்படுகிற திராவிட நாடு கோரிக்கையை 'காட்டுக் கூச்சல்' எனக் கருதுவது, நியாயமா?—என்று ஆராய்கிறார், தோழர் சம்பத்.

அவரது சொற்பொழிவின் இறுதிப்பகுதி இங்குதரப்படுகிறது:-

"பண்டித நேருவின் குழப்பத்திற்குக் காரணம் அவரது தெளிவற்ற தன்மை அல்ல; தெளிந்த நெஞ்சமுடையவர் என்பதால்தான் பெரும் தலைவர் பதவியை அவருக்குத் தந்திருக்கிறது, இந்தியத் துணைக்கண்டத்து அரசியல்!

பின், இந்தக் குழப்பத்திற்குக் காரணம்தான் என்ன?

"1947-க்கு முன்பு—வெள்ளைக்காரன் இந்தியாவைவிட்டு வெளியேறுவதற்கு முன்னால், 'வெள்ளையன் வெளியேறினால்தான் இந்தியாவில் வாழும் மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க முடியும்' என்று பண்டிதர் கொண்டிருந்த சுதந்திர வேட்கை—மக்களுக்கு உரிமைகள் வேண்டும் என்ற வேட்கை, வெள்ளையன் வெளியேறிய பிறகு தணிந்துவிட்டது.

"வெள்ளையன் விட்டுச் சென்ற ஆட்சிபீடத்தில் ஏறி அமர்ந்ததும், தன் கண் முன் ஒளிவிட்டுக்கொண்டிருந்த ஏகாதிபத்திய பளபளப்பு—எதையும் தன்னிச்சையாகவே செய்யும் சர்வாதிகார மினுமினுப்பு—இவற்றில் சொக்கிப்போய்விட்டார், பண்டிதர்! நான் முன்பு குறிப்பிட்டதுபோல், திரும்பிப் பார்த்தால், எவரும் தன்னோடு போட்டியிடக் கூடியவர்கள் இருக்கவில்லை. எல்லோரும் இவர் காலைக் கட்டிக் கொண்டு வளைய வளைய இவரையே சுற்றிவரும் அப்பாவிகளாய்த்தான் இருந்தனர்—இருக்கின்றனர். எனவே, 'தான் உயிரோடு இருக்கும்வரை தன்னைத் தட்டிக்கேட்க ஆள் இல்லை; எவரும் கேட்கமாட்டார்கள்' என்ற எண்ணத்தினால், சர்வாதிகாரப் பாதையில் நடைபோடத் துவங்கினார்.

"தலைகதவில்(?) தயக்கத்துடன் அடியெடுத்து வைக்க முற்பட்ட அவர், பின்னர் தைரியமாக நடக்க முற்பட்டார்; எல்லோருக்கும் அதிர்ச்சிதரத்தக்க வகையில், வேகமாக சர்வாதிகாரப் பாதையில் நடக்க முற்பட்டுவிட்டார்.

"எப்பேர்ப்பட்ட சர்வாதிகாரியின் இரும்பு நெஞ்சத்தையும் கலக்கிடத்தகுந்த சம்பவங்கள் நிகழும்போது மட்டும் பண்டித நேரு 1945-ம் வருடத்திய நேருவாக ஒரு கணம் மாறுகிறார்; அதற்குள், 'அடங்கிவிட்டோம்' என்ற போலீஸ் தகவல் கிடைத்ததும் உடனே உச்சாணிக் கொம்பில ஏறிக்கொண்டு 'கொக்காணி' காட்ட முற்பட்டுவிடுகிறார்.

"பொட்டி ஸ்ரீராமுலு சாவதற்கு 36 மணி நேரத்திற்கு முன்புவரை முடியாது, முடியாது; முடியவே முடியாது 'என்று கர்ஜனை புரிந்து கொண்டிருந்தார்.

"பொட்டி சீராமுலுவின் பிணம் விழுந்தவுடனே, ஆந்திர மக்கள், டில்லி நோக்கிச் செல்லுகிற இரயில்கள்மீது கற்களை வாரி எறிய முற்பட்டனர்.

"டில்லியிலிருந்து வடநாட்டவர் எவரும் தெற்கே வரமுடியாது—தெற்கேயுள்ள வடநாட்டவர் எவரும் டில்லிக்குப் பத்திரமாகப்போக முடியாது—என்ற நிலை, தற்காலிகமாகவேனும் ஏற்பட்டுவிட்டதைக் கண்டபின், பொட்டி சீராமுலு செத்த அடுத்த 36-வது மணிநேரத்தில், நேரு பேசினார்—'ஆந்திர மாநிலத்திற்காகப் போராட முற்பட்டுள்ள ஆந்திர இளைஞர்களே! சற்றுப் பொறுங்கள்; நான் என்ன தனி மாநிலம் தரமாட்டேன்என்று கூறினேன்? 'வேண்டாம்' என்று தானே கூறினேன்? 'வேண்டும்' என்று நீங்கள் பிடிவாதமாகக் கேட்டால், தந்து விடுகிறேன்; இதோ! அதற்கென ஒரு 'கமிஷன்' நியமிக்கிறேன்; ஆந்திரர்களே! நீங்கள் வாழ்க! ஆசிச் செய்தியை எழுதி வைத்துவிட்டேன்'—என்று!

"ஆந்திரர் விவகாரத்தில்தான் நாம் பலவீனமாகிவிட்டோம் என்று நினைத்து, விட்டுக்கொடுப்பதாகக் கூறினார்.

உடனே பேசினார்—'ஆந்திரர்கள் தனி மாநிலம் பெற்றுவிட்டார்கள் என்பதினாலேயே பிறரும் தனி மாநிலம் வாங்கலாம் என்று எண்ணக்கூடாது; நான் ஆந்திர மாநிலம் அமைவதற்குச் சம்மதித்ததற்குக் காரணம், பொட்டி ஸ்ரீராமுலுவின் பிணத்தைக் கண்டதினாலே அல்ல; அல்லது அதை ஒட்டி ஏற்பட்ட கலவரங்களுக்குப் பணிந்ததினாலும் அல்ல; 'மாகாணப் பிரிவினை காலத்தில், ஆந்திராவிற்கும் ஒரு இடம் உண்டு' என்ற தேசத்தின் பிதாவான காந்தியார் சொல்லியிருந்தார்; அந்த நினைப்பு வந்தது; அவருக்குச் செய்யும் அஞ்சலியாகவே ஆந்திர மாநிலம் அமைக்கச் சம்மதித்தேன்; எனவே, வேறு எவரும் தலையை நீட்டவேண்டாம்; நீட்டினால் அறுபடும்' என்று கூறினார்.

"ஆனால், மராட்டியத்திலேயிருந்து மொழி வழி மாநிலக் கோரிக்கை மெள்ள எழுந்தது; 'இந்தியாவே மூழ்கினாலும் என் கொள்கையிலிருந்து மாறமாட்டேன்' என்று பிடிவாதம் பேசினார்.

"ஆனால், 'அவர்களுக்கு நாங்கள் என்ன மட்டமா?' என்று கேட்டுக்கொண்டே, கற்களை மட்டுமல்ல—முரட்டுத்தனமான வெடிகுண்டுகளையும், எது எதற்கோ பயன்பட வேண்டிய திராவகங்களையும் பயன்படுத்தத் துவங்கினர் மராட்டியர்!

"அது எந்த அளவுக்குப் போயிற்று என்றால், 'இதோ, ஒரு குழுவை நியமிக்கிறேன்—மொழி வழி மாநிலக் கோரிக்கையைக் கவனிப்பதற்காக' என்று நேரு கூறுகிற அளவுக்குச் சென்றது.

"நாட்டில் பலரும், மாநிலப் புது அமைப்புக் கமிஷன் அமைக்கப்பட்டதும், சற்று சும்மா இருந்தனர்; ஆனால் நேரு சும்மா இருக்கவில்லை.

"'கமிஷன் நியமிக்கப்பட்டுவிட்டதினாலேயே, மொழி வழியாக மாநிலங்கள் அமையும் என்று எண்ணிவிடாதீர்கள்,' என்று பேச ஆரம்பித்தார்.

"பின்னர் அவர் கோடு கிழித்துக் கொடுத்தபடி, கமிஷனும் அறிக்கை தந்தது; அதில் மராட்டியருக்குஅநீதி இழைக்கப்பட்டது.

"பின்னர், பம்பாய், நேருவின் நண்பர்களான குஜராத்தியருக்குச் சாதகமான வகையில், நேரு சர்க்காரின் நேரடி ஆட்சியின் கீழேயே இருக்கும் என்று கூறப்பட்டது.

"பம்பாயே கொதித்து எழுந்தது!

"எந்த நேரு பண்டிதருக்கு ரஷ்ய விஜயத்திலிருந்து திரும்பியதும் கோலாகலமான வரவேற்பு தரப்பட்டதோ, எந்த நகர வீதிகளில் அவர் அன்று பவனி வந்தாரோ அந்த நேருவுக்கு—நான் நினைக்கிறேன்—நேரு பண்டிதர் கிடைக்காத காரணத்தால் அவர் திருஉருவப் படத்திற்கு, எவ்வெவற்றைக்கொண்டு அர்ச்சனைசெய்ய வேண்டுமென்று மனுேபீடங்கள் எழுந்தனவோ அப்படி எல்லாம் 'மரியாதை' செய்தார்கள், மராட்டியர்கள்!

"உடனே நேருவின் நாடி தளர்ந்தது; முறுக்கு தளர்ந்தது!

"'இல்லை என்று கூறினேன் என்றேல், இல்லை என்றே நினைத்துவிட்டீர்களா? கேட்க வேண்டியவர்கள், கேட்கவேண்டிய முறையில்—கேட்கவேண்டிய நேரத்தில் கேட்டால், மராட்டியம் மட்டுமல்ல—எது வேண்டுமானு

(4-ம் பக்கம் பார்க்க.)

உள்நாட்டில் மது ஒழிப்பு-வெளிநாட்டில் மது விருந்து!

இந்திய தூதுவராலய அதிகாரிகள் அளவுகடந்தல்!

"1953—54-ம் ஆண்டிற்குரிய இந்திய அரசாங்கத்தின் கணக்குகளை ஆராய்ந்து பார்த்தால், அவற்றிலுள்ள நிருவாக ஊழல்கள் வியப்பையும், வருத்தத்தையும் ஒருங்கே தரத்தக்கனவாய் இருக்கின்றன. இவ்வூழல்களை, மத்திய அரசாங்கத்தின் வருமானக் கணக்குக் குறிப்பு ஆணையாளர், ஓர் அறிக்கையில் விவரித்திருக்கிறார்.

"இந்தியாவின் கணக்குப் பரிசோதனைத் துறைத் தலைமை ஆணையாளரால் அச்சேற்றப்பட்ட இவ்வறிக்கை, 1955-ம் ஆண்டு கணக்காராய்வு அறிக்கையாக இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வறிக்கையில், நிருவாக ஊழல்களில் ஒரு சில மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்றவைகளைக் குறித்து, அரசாங்கம் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டதால், அவை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

"நடவடிக்கை எடுக்காத ஊழல்களே வியப்பையும், வருத்தத்தையும் தோற்றுவிக்கின்றன என்றால், அரசாங்கத்தால் கடுமையாகத் தண்டிக்கப்பட்ட அவ்வூழல்களையும், கணக்குப் பரிசோதனை ஆண்டு அறிக்கையில் சேர்த்திருந்தால், அவை பெருவியப்பையும், மிகுந்த வருத்தத்தையும் தரத்தக்கனவாய் இருக்குமென்று நினைக்கின்றோம்.

"1954-ம் ஆண்டு எப்ரல் முதல் தேதியிலிருந்து, 1955-ம் ஆண்டு ஜூலை 15-ம் தேதிவரை, 144 விருந்துகள் நடைபெற்றன என்றும், அவற்றிற்காக ரூ. 94,000 செலவிடப்பட்டதென்றும் அறிக்கை கூறுகிறது. இவற்றில், இந்திய திருவாகப் பொறுப்பாளர்கள் 91 விருந்துகள் அளித்தார்களென்றும், அதற்கு மதுபானச் செலவு நீங்கலாக, ரூ 65,000 செலவாயிற்றென்றும் தெரிகிறது; மதுபான வகைகள் கையிருப்பாக ஒரு பண்டகசாலையில் எப்போதும் இருக்கின்றனவாம்; 91 விருந்துகளுக்கு ரூ. 20,000 மதுபானச் செலவாயிற்று என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

"அயல்நாட்டு அமைச்சுத் துறை துறையினர் மது பானங்கள் வாங்கும் முறையைப்பற்றி அறிக்கையில் ஒரு குறிப்பு காணப்படுகிறது விருந்தின் செலவு ரூ 1,000-க்கு மேற்பட்டால் நிதித்துறையின் அனுமதி இன்றியமையாதது என்ற விதியை அதிகாரிகள் புறக்கணித்திருக்கிறார்கள்.

"மதுபானங்களையும், சிகரெட்டுகளையும் சிறுசிறு தொகுதிகளாக, அதாவது ரூ 1,000-க்குக் குறைவாக பன்முறை வாங்கியிருக்கிறார்களென்றும் விருந்துகளின் கணக்கு விவரத்தில் மதுபானச் செலவு சேர்க்கப்படுவதில்லை என்றும், இதனால் ரூ. 1,000-க்கு மேற்பட்ட செலவு ஏற்பட்டபோதிலும், கணக்கில் அத்தொகைக்குக் குறைவாகவே செலவினம் காட்டப்படுகிறதென்றும் அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

"அயல் நாட்டு அரசாங்கத் தலைவர்கள் இந்தியாவிற்கு வந்தபோது, இந்திய அரசாங்க அதிகாரிகள் அவர்களுடன் கூடச் செல்லுகையில், தனிப்பட்ட முறையில் மதுபானத்திற்காக ரூ. 9,692 செலவிட்டிருக்கிறார்கள். இது மட்டுமல்லாமல், உணவு விடுதிகளில் தங்கிய இந்திய அதிகாரிகளின் மதுபானச் செலவு மிகமிக் அதிகமாயிருக்கிறதென்றும், மற்ற அதிகாரிகளைவிட, இத்தொடர்பு அதிகாரிகள் அளவு கடந்த நிலையில் மதுபானச் செலவு செய்திருக்கிறார்களென்றும், இச்செலவினங்களைக் குறித்துத் தக்க மேற்பார்வையே கிடையாதென்றும் அறிக்கை சுட்டிக்காட்டி இருக்கிறது.

"மதுவிலக்குக் கொள்கையைப் பிடிவாதமாக நடத்திவரும் அரசாங்கத்தின் தலைமை நிறுவாகத் துறையில் இவ்வொழுக்கீனங்கள நடைபெறுமானால், மதுவிலக்கு ஒரு கொள்கையா. அல்லது நடைமுறைச் செயலா என்ற ஐயம் ஏற்படுகின்றது."

இவ்வாறு, 31-5-56 'தமிழ் நாடு' இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

வரி கொடுக்காமல் ஏமாற்றப்படுவது ரூ.30-40 கோடிதானும்

பிரிட்டிஷ் வரி விதிப்பு நிபுணர் மதிப்பீட்டுக்கு மறுப்பு?

புதுடில்லி, மே 31—

இந்தியாவில், ரூ. 200 கோடி முதல் ரூ. 300 கோடி வரை வரி கொடுக்காமல் ஏமாற்றப்படுவதாக பிரிட்டிஷ் வரி விதிப்பு நிபுணர் மதிப்பிட்டிருந்தார்; ஆனால், ரூ. 20 - 30 கோடிதான் வரி கொடுக்காமல் ஏமாற்றப்படுவதாக நிதி அமைச்சர் தேஷ்முக் தெரிவித்திருந்தார்; இப்போது மத்திய ரெவினியூ போர்டு, ஆண்டிற்கு ரூ. 30 - 40 கோடிதான் வரி கொடுக்காமல் ஏமாற்றப்படுவதாக மதிப்பிட்டுள்ளதாம்.

சர்வோதய ஊழியர்களாக நிபந்தனை

சர்வோதய ஊழியர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் பொருட்டு திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களால், 15-அம்சத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

வாழ்க்கையை அர்ப்பணிக்க விரும்பும் ஒவ்வொரு ஊழியரும் கீழ்க்கண்ட உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்:—

1 நிலமுள்ளவர்கள் நிலக்கொடை இயக்கத்திற்கு ஒரு பகுதியை அளிக்க வேண்டும்.

2. ஒவ்வொருவருடைய வருமானத்திலோ, அல்லது உற்பத்தியிலோ ஒருபகுதி சம்பத்தானத்திற்கு அளிக்கவேண்டும்.

3. உடலுழைப்பு அளிப்பதில் முழுநம்பிக்கை கொள்ளவேண்டும்.

4 நூல் நூற்பதையும், கதர் அணிவதையும் ஊழியர்கள் குடும்பத்தினர் அனைவரும் மாமூலாக்கிக் கொள்ளவேண்டும்.

5. கூடியவரையிலும் கிராமப் பொருள்களையே பயன்படுத்த வேண்டும்.

6. போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதை முழுவதும் விலக்கவேண்டும்.

7. தீண்டாமையை விலக்க வேண்டும்.

8. எல்லாத் தகராறுகளையும் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் தங்களுக்குள்ளேயே பஞ்சாயத்து மூலமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

9. நிலவுடைமையாளர்களாக இருந்தால், தங்கள் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதில்லை என முடிவு செய்யவேண்டும்.

10. எந்தத் தேர்தலிலும் கலந்து கொள்ளக்கூடாது.

11 நிலக்கொடை, மற்றும் ஆக்க வேலைகளில் தீவிரமாக ஒத்துழைத்தல்.

12. பொய் வழக்குகளுக்கு வழக்கறிஞர்கள் செல்லக் கூடாது.

13. மருந்துக்கும், தங்கள் தங்கள் வாழ்க்கைக்கும் குறைந்தபட்ச அளவுக்கு மேல் அதிகமாக நோயாளிகளிடமிருந்து டாக்டர்கள் பணம் வசூலிக்கக் கூடாது.

14. வணிகர்கள் கள்ளவாணிபத்தில் ஈடுபடாமலும், வரி கொடாமல் ஏமாற்றம் செய்யக் கூடாது.

15. நிலக்கொடை இயக்கத்தையும், அதன் கொள்கைகளையும் பரப்புவதில் பகுதி நேரமாவது அறிஞர்கள் கருத்து செலுத்த வேண்டும்.

தீவிரமான நிலக்கொடை இயக்க வளர்ச்சிக்கு இப்புதிய திட்டம் பெரிதும் உதவும் என்று சர்வோதய சம்மேளனப் பிரமுகர் ஒருவர் கூறினார்.

'மேஜை—ஆண்பால்; நாற்காலி—பெண்பால்'

'இப்படி இலக்கண இலட்சணமுடைய இந்தி இந்தியாவின் தேசிய மொழியாவதா?'

நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர் எள்ளிநகையாடுகிறார்

சென்னை, ஜூன் 1—

இந்தி மொழியை இந்தியாவின் தேசிய மொழியாக்கிவிட எண்ணுவோரை ஏளனம் செய்திருக்கிறார், ஏ. எஸ். பி. ஐயர்—சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி.

"இந்தியாவில் 12 முக்கியமான மொழிகள் இருக்கின்றன; 'மேஜை'—ஆண்பாலாகவும், 'நாற்காலி' பெண்பாலாகவும் இலக்கணப் படுத்தப்படுகிற இந்தி, இந்தியாவின் தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்று முயற்சிக்கப்படுகிறது"

—என்று அவர் எள்ளிநகையாடியிருக்கிறார், சென்னைக் கூட்டம் ஒன்றில்!

ஒரு பொதுவான லிபியை மேற்கொண்டால், இதரமொழிகள் கற்பதில் உள்ள சிரமம் 50 சதவிகிதம் குறையும் என்றும், எல்லா மொழிகளிலும், ரோமன் லிபியை மேற்கொள்ளத் துணிவு கொள்ள வேண்டும் என்றும், ரோமன் லிபி மேற்கொள்ளப்பட்டால் இந்திகூட சுலபமாகக் கற்றுக்கொள்ளத்தகும் மொழியாகும் என்றும், அப்போது இந்திய மொழிக் குடும்பத்திற்குத் தமிழ், தன்னிடமுள்ள சிறப்பு 'ழ'காரத்தைத் தரமுடியும் என்றும் மேலும் பேசிய அவர் கூறியிருக்கிறார்.

சர்க்கார் மேற்கொள்ளப்போகும் மின்சார நிறுவனங்கள்

தென்னாட்டு மக்கள் சபை உறுப்பினருடன் மந்திரி விவாதம்

புதுடில்லி, ஜூன் 1—

"பொது மக்களுக்கேற்றபடி பணிபுரியாத மின்சார நிறுவனங்களும், அரசியலாரின் மின்சார விரிவு படுத்தும் திட்ட வேலைகளுக்குத் தடையாயுள்ள நிலையங்களும் 'ஆர்ஜிதம்' செய்யப்பட்டு வருகிறது. இதற்கென 2-வது திட்டத்தில் மாநில சர்க்கார் ரூ. 309 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. மின்சாரக் கம்பெனிகளை 'ஆர்ஜிதம்' செய்ய சென்னை அரசினர் தயாரித்த படிப்படியான ஒரு திட்டம் 1961-ம் ஆண்டுடன் முடிவடையும். சுமார் 30 மின்சார 'கம்பெனி'கள் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்படும்"

என்று, மத்திய பாசன, மின்விசைத் துணை அமைச்சர், 2-வது திட்டத்தின் கீழ் சென்னை மாநிலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களைப் பற்றி சென்னை பாராளுமன்ற உறுப்பினர்களுடன் விவாதிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அவ்விவாதத்தில், காவிரியின் நீரை முழுதும் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டதெனவும், ஆனால் குறைவான அளவுக்கே உபரிநீர் கடலில் சேருவதாக பதிலளிக்கப்பட்டதெனவும் தெரிகிறது.

மேலும், மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் பற்றி அமைச்சர் கூறியதாவது:—

வடஆற்காடு மாவட்டத்தில் 156 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயப் 'பம்பு'கள் 1945 திறவப்படும்; ரூ. 95 இலட்சம் செலவழிக்கப்படும்.

இரண்டாவது திட்டத்தில் சென்னை மாநிலம் முழுவதிலும் 2,000 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்படும். விவசாய 'பம்பு'கள் 24,000 அமைக்கப்படும்; ரூ. 1,200 இலட்சம் செலவழிக்கப்படும்.

ஹொகனேகல் நீர் மின்விசைத் திட்டத்திற்கு முதலிடம் தரப்பட வேண்டுமென்று சில உறுப்பினர்கள் வற்புறுத்தினர். இத் திட்டம் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஹொகனேகல் நீர் வீழ்ச்சிக்கு மேல்புறம் 6 மைல் தொலைவில், காவிரியின் குறுக்கே ஒரு அணையைக் கட்டுவது இத்திட்டத்தின் நோக்கம்.

சர்வோதய சம்மேளனம்: 'சுதேசமித்திரன்' விளக்கம்

'பேச்சுகளிலும், தீர்மானங்களிலும் பெரும்பகுதி விளங்காது'

'புரிந்து கொள்ளாதவர் நம்மிலேயே பலர் இருக்கலாம்'

'பழையபடி உத்தம வழிக்குத் திருப்புவது எளிதான காரியமல்ல'

"சர்வோதய சம்மேளனத்தில் வெளியான பேச்சிலும், நிறைவேறிய தீர்மானங்களிலும் பெரும்பகுதி வெளியாருக்கு விளங்காது; இவற்றைப் புரிந்துகொள்ள இயலாதவர்கள் நம்மவர்களிலேயே பலர் இருக்கலாம். 'பணத்தாசை கொடிது; உண்மையில் எல்லா ஆசைகளையுமே விட்டுவிட வேண்டும்; நம்மிடமுள்ள எதுவும் நமக்குச் சொந்தமல்ல; அவையனைத்தையும் சமுதாயத்துக்குக் கொடுத்துவிட்டால்தான் இன்பமுண்டு,' என்று பல பிரமுகர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர். எவ்வளவுதான் நமக்குப் புதிது புதிதான சுகங்கள் கிடைத்தாலும் நம் மனம் நிம்மதி அடையப் போவதில்லை; மேன்மேலும், நவ, நவமான ஆசைகளை சிருஷ்டித்துக் கொண்டு அவை நிறைவேறத் துடிப்பது மனத்தின் இயல்பு; நெருப்பை அணைக்க அதன் மீது நெய்யையா ஊற்றுவது? தண்ணீரை ஊற்றி அவிப்பதுபோல், ஆசைகளை அழிக்க வழி காண வேண்டும்; அவ்வழியைக் குறிப்பது பூதானம் என்று பாபு இராசேந்திர பிரசாதும் பேசியுள்ளார். இத்தகைய கருத்துக்களை மனதார ஏற்று நடக்கக்கூடியவர்கள் இன்றைய நிலையில் எவ்வளவு பேர் இருக்க முடியுமென்று சொல்லத் தேவையில்லை."

—'சு. மி.'; 30—5—56

"சம்மேளனத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீ பட்டவர்த்தன், இன்னும் ஒரு படி—ஏன்—பல படிகள் அதிகமாகச் சென்றுள்ளார். "பணம் அடியோடு வெறுத்துத் தள்ள வேண்டிய விஷயம் என்பது அவர் துணிபு ஏனெனில், அது மாயை; அதன் வலையில் சிக்கினால் மனிதப் பண்பு பாழாகிவிடும்; உழைப்பின் பெருமை ஒன்றையே மற்றனைத்தையும்விட முக்கியமாகக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீ பட்டவர்த்தன் உணர்த்துகிறார். அதுமட்டுமில்லை, எல்லாவிதமான உழைப்புகளும் சம அளவு பெருமையுள்ளவைதான்; நாவிதத் தொழிலாகட்டும்—தச்சுத் தொழிலாகட்டும்—வக்கீல் வேலையாகட்டும்—அனைத்தும் ஒன்றே என்றும் அவர் உபதேசித்துள்ளார். நெடுநாளாக, வேறுவிதமாக எண்ணிப் பழகிய பெரும்பாலான மக்களுக்கு இத்தகைய உபதேசங்களை ஜீரணிப்பது எளிதல்ல.

"மேற்குறித்த உபதேசங்கள் எல்லாம் நவீன நிலைமைக்கு ஏற்றவைதானா என்று நம்மில் பலர் வியப்புறலாம். 'கவைக்குதவாத பேச்சு' என்று, சரேலென்று இவற்றை அடியோடு அலட்சியம் செய்யவும் அநேகர் முற்படலாம். ஆனால், சிறிது ஆழ்ந்து சிந்திப்போரின் முடிவு அவ்வாறிராது. நம் முன்னோர்கள், உலகாயத வாழ்வைப் பெரிதாக எண்ணியவர்களல்ல; அதைவிட உன்னதமான ஆத்மீக வாழ்விலேயே அவர்கள் நிலையான சாந்தி கண்டவர்கள். எனினும், இந்நாடு, சமீப காலத்தில் சுயநினைவு இழந்து, வெளியாரின் பகட்டான வாழ்வில் மோகங்கொண்டது உலகாயத வாழ்வில், விஞ்ஞானம் மேன்மேலும் வளரலாம்; ஆனால், மனிதனுக்கு அதனால் சாந்தி கிடைக்காது; அவனது அல்லலைத்தான் அது பெருக்கும் என்பதை, கீழ்நாடுகளில் மட்டுமின்றி மேனாடுகளிலுள்ள மேதாவிகளும் தற்போது உணர்ந்து வருகின்றனர்.

"ஆனாலும், நமது சமுதாயத்தைப் பழையபடி உத்தம வழிக்குத் திருப்புவது எளிதான காரியமல்ல; அதிலும், ஜனங்கள் அனைவரையும் ஏககாலத்தில் இந்த உன்னத வாழ்வுக்கு உயர்த்துவதென்பது அசாத்தியம். ஆங்காங்கு இதில் திடமான நம்பிக்கையுள்ள சில தனிப்பட்டவர்கள்தான் இந்த உயர்தர வாழ்வை வாழ்ந்து காட்ட முடியும்."

—'சு. மி'; 28-5-56

ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவு

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லும் கிடைக்கும்,' என்று இழுத்துப் பேச ஆரம்பித்தார்!

"என்ன பொருள் இந்தப் போக்கிற்கு? நேரு, எதையும் ஒரு இலட்சியம்—அதை அடைவதற்கான கொள்கைகள் என்ற 'தராசு'தில், எந்த இலட்சியத்தையும், கொள்கைகளையும் ஆராய்வதாகக் காணோம்!

"தனி அதிகாரம் நிலைக்க—எவரும் எதிரே நின்று 'ஏன்' என்று கேட்காத சர்வாதிகாரச்சூழ்நிலையை அமைத்துக்கொள்ள வழிகளைத் தேடித்தேடி அலுத்துப் போய்விடுகிறார்.

"அதனுலேதான், மராட்டியர்கள் சம்யுக்த மராட்டியத்திற்காகக் குரல் கொடுக்கிறார்கள் என்றால், 'குரல்வளையை அறுத்து எறியுங்கள்; அடித்து நொறுக்குங்கள்; கொன்று குவியுங்கள்,' என்கிறார்;

"அப்படிக் கொன்று குவித்துவிட்ட பிறகு, கொல்லப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கையைக் கண்டு திகைக்கிறார்.

"உடனே, ஜனநாயகப் பண்புகள் அவரிடத்தில் தாற்காலிகமாகவேனும் மலருகின்றன.

"இது எதைக் காட்டுகிறது? கல் இல்லாமல், வெடிகுண்டு வீச்சு—அடிதடி இல்லாமல், இரத்தக்கறை படியாமல் ஒரு பிரச்சினை நேருவின் கவனத்தை ஈர்ப்பதில்லை என்பதைத்தானே!

"ஒரு பிரச்சினை அவரின் கவனத்தை ஈர்க்க, இரத்தக்கறை படியாமல் — பின்னுல் பிணங்கள் பலவற்றை அடுக்கி வைத்துக் கொள்ளாமல் முடிவதில்லை என்ற ஒரு கேவலமான பெயரை, நேரு நிலை நாட்டிக் கொண்டிருக்கிறார்!

'பண்டித நேருவின் கொள்கைக் குழப்பங்களையும், அவற்றிற்குக் காரணமான அவரது எதேச்சாதிகாரத்திய வெறியையும் நாம் விளக்கமாக எடுத்துரைப்பதற்குக் காரணம், 'நேரு அகில உலக மேதையாயிற்றே! அவருக்குத் தெரியாதா? அவருக்குத் தெரியாத நியாயத்தையா நாம் பேசப் போகிறோம்?' என்று, இங்குள்ள தாசானுதாசர்கள் சிலர் பேசுகிறார்களல்லவா?—அவர்கள் விளக்கம் பெற வேண்டுமென்பதற்காகத்தான்!

"தாசர்களே! சற்று தலையை உயர்த்துங்கள்! உங்களை நேரு ஒன்றும் கோபித்துக் கொள்ள மாட்டார்; அவர், வெகு தொலைவில் இருக்கிறார்; தலையை உயர்த்தி எங்களைக் கொஞ்சம் பாருங்கள்; நாங்கள் கூறுவதை உற்றுக் கேளுங்கள்; அமைதியாக சிந்தித்துப் பாருங்கள்!

"1945-ல் பண்டிதருக்குத் தெரிந்திருந்த நியாயம், 1956-ல் தெரியாமல் போனதேன்? சிந்தித்துப் பாருங்கள்!

"1945-ல், தனி மாநிலங்கள் மட்டுமல்ல—அந்த மாநிலங்களுக்கு உள்ளே, ஒருசில கோஷ்டி பிரிந்து போக வேண்டுமென்றாலும், அதற்கு அந்த உரிமை உண்டு—என்று வாதாடிய நேரு, 1956-ல், திராவிட நாடு கோரிக்கையை, 'காட்டுக் கூச்சல்; வெறிக் கூச்சல்' என்று பேசுவது என்ன நியாயம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

"திராவிட நாடு கோரிக்கை; பண்டித நேருவோ, அல்லது வேறு சிலரோ கூறுவதுபோல, உணர்ச்சி வயப்பட்ட சில வெறியர்களின் காட்டுக் கூச்சல் அல்ல!

"இந்தத் திராவிட நாடு இலட்சியம் ஈடேறுவதற்குத் தாமதம் ஆக ஆக, அந்த அழகான இலட்சியம் உணர்ச்சியை மேற்கொள்ளுகிறது; தாமதம் ஆக ஆக, புனிதமான அந்தத் தத்துவம், கனல்போல் காட்சி அளிக்கிறது, எதிரிகளுக்கு! அதுவே தவிர, இலட்சியம், வெறியின் விளைவு அல்ல! காட்டுக் கூச்சல் அல்ல! வகுப்புவாதமல்ல!

"மத அடிப்படையில் பாகிஸ்தான் பிரிவதற்கு 1947-ல் ஒப்புக்கொண்டுவிட்டு, இனம் அல்ல—மொழி அல்ல—கலாச்சாரம் அல்ல—'முஸ்லிம்கள்' என்ற மத அடிப்படையில் ஒரு தனிநாடு அமைவதற்குச் சம்மதம் அளித்துவிட்டு, இனம், மொழி, கலாச்சாரப் பண்பாடுகளின் வரலாற்றுப் பின்னணியோடு, ஒரு பெரும் தத்துவ அடிப்படையைக்கொண்ட திராவிட நாடு கோரிக்கையை ஏற்க மறுப்பது, எப்படி விவேகமானதாயிருக்க முடியும் என்பதையும், இங்குள்ள வடநாட்டுக்கு தாசானுதாசர்களாயிருப்போர் எண்ணிப் பார்க்க வேண்டும்!

"இந்தக் கொள்கைக் குழப்பங்கள் எல்லாம், நம்முடைய இலட்சியத்தைச் சற்று நேரம் மறைக்க முயலுகின்ற புழுதிப் படலங்கள்தான்! இந்தப் புழுதிப் படலங்கள், அடுத்து வரும் காற்றில் அடித்துக் கொண்டு போகப்பட்டுவிடும்!

"இவை எத்தனைதான் முயன்றாலும், நம்முடைய இலட்சியம் மறைக்கப்பட முடியாது. அது, நமது கண்களுக்கு இலட்சியம் மட்டுமல்ல—தெளிவாகத் தெரிவது! அந்த இலட்சியம் பலிதமாவதற்கான வழியும் வெகு தெளிவாகத் தெரிகிறது. அந்த வழி நடக்கத் திட்டமிடுவதுதான் இந்த மாநாடு!"

தொடர்ந்து பேசிய தோழர் சம்பத் அவர்கள் தமிழ் நாட்டு அரசியலில் நிலவும் சில கொள்கைக் குழப்பங்களையும் விளக்கி அந்தக் குழப்பவாதிகளால், கழகத்தின் கட்டுக்கோப்பை எதும் செய்துவிட முடியாது என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டினார்

"கழகத்திலிருந்து எவர் விலகிவிட்டாலும், கழகம் எவரது இழப்பினாலும் குலைந்துபோய் விடக்கூடியது அல்ல,"

என்று அவர், தான் விலகிவிட்டதாகச் செய்தி வெளியிட்டோரைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டபோது, கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களும் பெரும ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.

தலைக்கு 5,000 டாலர் பரிசு!

சைப்ரஸ் தீவின் விடுதலை கோரும் தீவிரவாதிகள் மீது 'யுத்தம்'

நிகோசியா, ஜூன் 3—

சைப்ரஸ் தீவிற்கு விடுதலை, சுயநிர்ணய உரிமை கோரி போரில் ஈடுபட்டிருக்கும் சில தீவிரவாதிகளுடைய தலையின் 'மதிப்பு' உயர்ந்து வருகிறது.

இருவருடைய தலையைக் கொண்டுவந்து தருவோருக்கு ஒவ்வொரு தலைக்கும் 5,000 டாலர் தருவதாக பிரகடனப்படுத்தியிருக்கின்றனர், வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள்!

இப்போது அந்த இருவரும், வேறு 15 பேர்களுடன் சேர்ந்து வெள்ளை இராணுவத்தினரிடம் சிக்கிவிட்டதாகக்கூறிப் பெருமைப் பட்டுக்கொண்டிருக்கிறது, அந்த ஏகாதிபத்தியம்!

விடுதலைக் கிளர்ச்சியை ஜனநாயக ரீதியில் நடத்தி வந்த மகாரியஸ் பாதிரியார் உள்ளிட்ட கிளர்ச்சித் தலைவர்களை, நாடு கடத்திவிட்டு, அதனுல நாட்டில் ஏற்பட்டுள்ள கொதிப்பின் விளைவுகளை 'பயங்கரவாதிகளின் செயல்' என்று வர்ணித்து, விடுதலை கோருவோரை அழித்து ஒழிக்க, இராணுவத்தினரைக்கொண்டு கடுமையான அடக்குமுறைகளை ஏவி வருகிறது வெள்ளை ஏகாதிபத்தியம்!

இப்போது, தலைமறைவாகிவிட்ட தீவிரவாதிகளைப் பிடித்துத் தருவோருக்கு ஆயிரக்கணக்கான டாலர் தருவதாக பறை சாற்றுகிறது!

விடுதலை பெற, சுயநிர்ணய உரிமை பெற, சைப்ரஸ் மக்கள் இன்னும் எவ்வளவு விலை தர வேண்டுமோ?

விடுதலைப்போரில் 300 பேர் பலி

பிரெஞ்சுப் படையினர் சுட்டு வீழ்த்தினர்

அல்ஜியர்ஸ், ஜூன் 2—

கடந்த 18 மாதங்களில் ஏற்பட்டிராத அளவில், கடந்த புதன் கிழமையிலிருந்து பிரெஞ்சுப்படையினர், தேசியவாதிகளை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனராம்

அல்ஜியர்சுக்குத் தென்கிழக்கே இரு இடங்களில், 300-க்கு மேற்பட்ட தேசியவாதிகளை, ஒரு போராட்டத்தின்போது பிரெஞ்சுத் துருப்புகள் சுட்டுக் கொன்றதாகவும், 150-க்கு மேற்பட்டவர்களை கைது செய்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

10 ஆண்டுகட்குப் பின்னர்!

மார்ஷல் டிட்டோ மாஸ்கோ போய்ச் சேர்ந்தார்.

மாஸ்கோ, ஜூன் 2—

கலைக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்து (கோமின் பார்ம்) யூகோஸ்லாவியா விடுபட்ட பின்னர், முதல் தடவையாக — 10-ஆண்டுகளுக்குப் பின்னர், மார்ஷல் டிட்டோ, இன்று மாஸ்கோ போய்ச் சேர்ந்துள்ளார். அங்கு அவர் மூன்று வார காலத்திற்குச் சுற்றுப்பயணம் செய்வார்.

தெரிந்து கொள்ளுங்கள்!

தனியார் மின்சார உற்பத்திக் 'கம்பெனி'களின் வெளிநாட்டு மூலதனம் ரூ 14,20,00,000 என்றும் அத்தகையகம்பேனிகளின் மொத்த மூலதனம் ரூ. 52,67,00,000 என்றும், மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா

5—6—'56 நிகழ்ச்சிகள் :

★

இயல் அரங்கு :

இலக்கை திரு. கந்தையாவைத்தியநாதன் தலைமையில், அமைச்சர் திரு. சண்முக இராசேசுவர சேதுபதி பரிசு வழங்குவார். திரு. சி. எம். இராமச்சந்திரன் (செட்டியார்) 'ஆலயங்களின் அமைப்பு'; திரு. அகிலாண்டம் 'மறுமலர்ச்சி சிறு கதைகள்'; திரு. பி. என். அப்புசாமி 'அறிவியல்'; திருமதி ஆர். இராசமணியம்மையார் 'தமிழர் ஆடை அணிகள்'; திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் 'தமிழ் நாடகம்'; திரு. அ. மு. சரவண (முதலியார்) 'தமிழர் வீரம்'; திரு. இரா. நெடுஞ்செழியன் 'சங்க கால அரசியல்'—ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவாற்றுவார்கள்.

இசை அரங்கு :

திரு. ச. வெள்ளைச்சாமி (நாடார்) தலைமையில், திரு. விருசாமி குழுவினரின் நாதசுர இன்னிசை விருந்து நடைபெறும்.

நாடக அரங்கு :

திரு. ஈ. வெ. இராமசாமிப் பெரியார் தலைமையில் திரு. டி. கே. எஸ் சகோதரர்கள் குழுவினரின் 'இராஜ இராஜ சோழன்' நாடகம் நடைபெறும்.

அநீதியை நிலைநாட்ட..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இப்படி பம்பாய் டில்லி ஆட்சியின்கீழ் இருக்கவேண்டும் என்பதற்கு என்ன அவசியம்? மராட்டியருக்கு அவர்களது தலைநகரான பம்பாய் தரப்படாது போவதற்குக் காரணம் என்ன? என்ற மராட்டியரின் கேள்வி, விடையிறுக்கப் படாமலேயே இருக்கிறது.

நீறு பூத்த நெருப்பாக இருந்து, காங்கிரசுக் கூட்டத்தை ஒட்டி அனலாக மாறியிருந்த பம்பாய், இப்போது, நேருவின் இந்த எதேச்சாதிகாரமான — ஆணவமான போக்கினுல் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்திருக்கிறது.

இனி அடுத்த வழி என்னவென்று மராட்டியத் தலைவர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

பம்பாய் பிரச்சினையில் பதவியிலிருந்து விலகிவிடப் போவதாக அறிவித்திருந்த மத்திய நிதி மந்திரி தேஷ்முக், இப்போது என்ன செய்யப் போகிறார்? பம்பாய் மாநில மராட்டிய மந்திரிகள் எப்படி நடந்துகொள்ளப் போகின்றனர்? காட்கிலும், தேவும் என்ன பேசப்போகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள ஆவல் மிக்கவர்களாகப் பம்பாய் வீதிகளில் வலம் வந்தவண்ணமுள்ளனர், மராட்டிய வீரர்கள்!

புத்தரின் பொன்மொழி—பிரதமர் எடுத்துக் காட்டு!

'கத்தியின் மூலம் உலகை வென்றவன், அதன் மூலமே அழிவையும் தேடிக் கொள்வான்' என்று, புத்தர், இயேசு கூறியுள்ள பொன்மொழிகளை எடுத்துக்காட்டி நீர்வளிக் குண்டின் நாச சக்தியைக் குறிப்பிட்டுப் பேசுகையில், அ. இ. கா. க. கூட்டத்தில் பண்டித நேரு விளக்கம் காட்டினர்.

"நீர்வளிக் குண்டைப் பயன்படுத்திய நாடு பயன்படுத்தப்பட்ட நாடு ஆகிய இரண்டும் கட்டாயம் அழிந்தேவிடும்; இதிலிருந்து தப்புவதற்கு வழியே கிடையாது," என்று அவர் குறிப்பிட்டார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு'

நான்காம் ஆண்டு துவக்கவிழா மலர்

(12 பக்கங்கள்)

★

15—6—56-ந் தேதியன்று நாடெங்கும் கிடைக்கும்

விலை அணு 2.

★

அண்ணு, மற்றும், கழக எழுத்தாளர் பலரும் எழுதுகின்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஓய்வு பெற விரும்புவ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக ஆவேசமாகப் பேசினாராம்.

"பலாத்காரச் செயல்களுக்கு எதிராகப் போராடுவதினுல், காங்கிரஸ் தோற்றுவிடும் என்றாலும், நான் அதுபற்றிக் கவலைப்படமாட்டேன்; அதனை வரவேற்பேன்; காங்கிரஸ் தேர்தலில் தோற்பது ஒருவகையில் நல்லதுங்கூட! ஏனெனில், அப்போதுதான் காங்கிரசார், தங்கள் சுகத்தைமட்டும் கவனித்துக் கொள்ளும் போக்கிலிருந்து விடுபடுவர்; அவர்களிடை நிலவும சோம்பல் முறியும்" என்றும் அவர் கூறினாராம!

'தமிழ் மக்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்படுகிறது'

'இதனை எதிர்த்து மக்கள் சபை உறுப்பினர்கள் போராடவேண்டும்'

அகில இந்திய வானெலியின் போக்கிற்கு எம். ஏ. முத்தையா (செட்டியார்) கண்டனம்

"இந்திய வானெலி, தமிழ் மக்களுக்குப் பெருத்த அநீதி செய்து வருகிறது.

"75 சதவிகிதம தமிழ்ப் பாடல்கள் வெளியிட்டு வந்த வானெலியானது, தற்சமயம் 25 சதவிகிதமே தமிழ்ப் பாடல்களை வெளியிடுகிறது.

"இதை எதிர்த்துத் தமிழ் மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

"மக்கள் சபையிலுள்ள தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள், செய்தி அறிவிப்புத்துறை அமைச்சரிடம் தமிழர்களின் குறைகளை முறையாகத் தெரிவிப்பதும் கிடையாது; தவறான செய்திகளைக் கூறுவதாலேயே இக்குழப்பம் ஏற்படுகிறது.

"தமிழ் மக்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்தால்தான், தமிழ் வளர்ச்சி அடையும்.

"தமிழ் இசை வேண்டும் என்பதற்காக ஏற்பட்ட கிளர்ச்சி தற்சமயம் குறைந்துவிட்டது. தமிழ் நாட்டிலேயே தமிழ் இசைக்காகக் கிளர்ச்சி நடத்துவது, துர்ப்பாக்கியமானதாகும்; இத்தகைய நிலை இங்குதான் இருக்கிறது,"

என்று, இராஜா சர். எம். ஏ முத்தையா (செட்டியார்) அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா இசை அரங்கு இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி, சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய(பிள்ளை) இசைக் குழுவினரைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.